**வாழ்க்கைத் தொழில்சார் தொழிநுட்பவியல் பல்கலைக்கழகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக் கொண்ட தகவல்களுக்கும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, வாழ்க்கைத் தொழில்சார் தொழிநுட்பவியல் பல்கலைக்கழகத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கணக்குப் பதிவேடுகள் முறையாகப் பேணப்பட்டிருந்தன எனவும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக் கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர வாழ்க்கைத் தொழில்சார் தொழிநுட்பவியல் பல்கலைக்கழகத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1:2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1:2:1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2011 பெப்ரவரி 25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட வரைபு இறுதிக் கணக்குகள் தொடர்பான தெரிவுச் செவ்வையின் போது கண்டறியப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் உள்ளடக்கப்பட்ட அறிக்கை 2011 மே 31 இல் பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அக் குறைபாடுகள் சீராக்கப்பட்டு திருத்தப்பட்ட கணக்குகள் 2011 யூன் 14 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

#### 1.2.2 இலங்கை கணக்கீட்டு நியமம்

2008 இன் 31 ஆம் இலக்க வாழ்க்கைத் தொழில்சார் தொழிநுட்பவியல் பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 69(2)(அ) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை தேசிய தொழிநுட்பக் கல்வி நிறுவகத்திடம் இருந்த காணி, கட்டிடங்கள், கற்பித்தல் உபகரணங்கள் மற்றும் மரத்தளபாடங்கள் பல்கலைக்கழகத்தால் கையேற்கப்பட வேண்டிய போதிலும் 2010 திசெம்பர் 31 வரை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே இலங்கை

கணக்கீட்டு நியமம் 18 இன் பிரகாரம் சொத்துக்கள் மதிப்பிடப்பட்டு கணக்கிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

---

மீளாய்வாண்டின் போது உள்ளபடியாகச் செலுத்தப்பட்டிராத ரூபா 5,040,000 தொகையான ஓர் மின் பிறப்பாக்கி திருத்தமும் ரூபா 10,478,230 ஆன சிற்றுண்டிச்சாலையின் சமையலறை திருத்தங்களும் மூலதனமாக்கப்பட்டு ஆண்டின் போது பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தது.

**1.2.4 பெற வேண்டிய கணக்குகள்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கடன்பட்டோர் மற்றும் பெறவேண்டிய மீதியாகக் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 4,973,727 தொகை 2 ஆண்டுகள் முதல் 5 ஆண்டுகள் வரையான காலமாகத் தீர்க்கப்படாது இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) நோராட் செயற்திட்டத்தில் இருந்து பெற வேண்டிய ரூபா 3,722,630 தொகை இரண்டு ஆண்டு காலத்திற்கு மேலாக தீர்க்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) பல்கலைக்கழகத்தில் கடமையாற்றி விலகிச்சென்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து பெறப்பட வேண்டிய ரூபா 146,588 தொகையான இடர் கடன்களும் விசேட மற்றும் விழா முற்பணங்கள் என்பனவும் அறவிடப்படுவதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்** | |
| நி.பி 371 | குறித்த பணி முடிவுற்றதை உடன் முற்பணத்தொகை தீர்க்கப்பட வேண்டிய போதிலும் முற்பணத் தொகை தீர்க்கப்படுகையில் ஏற்பட்ட தாமதம் 39 முதல் 55 நாட்கள் வரையாகக் காணப்பட்டது. |
| **பொது முயற்சிகள் சுற்றறிக்கை** | |
| 2004 யூலை 29 ஆம் திகதிய பீஈடீ/25 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகாரம் பெறப்படாது ரூபா 4,110,000 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| **திறைசேரிச் சுற்றறிக்கை** | |
| 2004 பெப்ரவரி 24 ஆம் திகதிய 01/2004 ஆம் இலக்க சுற்றறிக்கை | வரைபு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், நிறுவனத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான பல்கலைக்கழகச் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகள்

மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தினை கணக்கிலெடுத்துக் கொள்வதற்கு முன்னரான பற்றாக்குறை ரூபா 77,602,043 ஆகக் காணப்பட்டதுடன் இதனொடொத்த முன்னைய காலப்பகுதிக்கான பற்றாக்குறை ரூபா 23,719,780 ஆகக் காணப்பட்டது. மீளாய்வாண்டில் பெறப்பட்ட ரூபா 74,664,000 தொகையான மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தினைக் கணக்கிலெடுத்துக் கொண்டதன் பின்னர் பற்றாக்குறை ரூபா 2,938,043 ஆனதுடன் இதனோடொத்த முன்னைய காலப்பகுதியின் போது பெறப்பட்ட ரூபா 19,900,000 தொகையான மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கிற்கு எடுத்த பின்னர் ரூபா 3,819,780 ஆன பற்றாக்குறையாக இருந்தது.

## 2.2 செயற்பாடு மீளாய்வு

### 2.2.1 செயலாற்றல்

### (i) விரிவுரைகள் நடாத்தல்

பல்கலைக்கழத்தின் கல்வி நடவடிக்கைகளுக்காக 10 விரிவுரையாளர்களும் 27 விரிவுரை உதவியாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அக் கல்விசார் பதவியணியினரால் நடாத்தப்பட்ட விரிவுரைகள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பாடவிதானங்கள் தயாரிக்கப்படுவதற்கு மேலதிகமாக 2010 ஆம் ஆண்டின் போது விரிவுரைகள் நடாத்தப்படுவது தொடர்பான ஆய்வின் போது விரிவுரையாளர்கள் மிகக் குறைவான விரிவுரை மணித்தியாலங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததையும் வேறு ஓர் பதவியினர் எவ்வித விரிவுரைகளையும் மேற்கொண்டிராமையும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2010 சனவரி முதல் 2010 ஆகஸ்ட் வரை பட்டப்பின்படிப்பு நடவடிக்கைகளுக்காக வெளிநாட்டிற்குச் சென்றிருந்த விரிவுரை உதவியாளர்கள் இருவர்களில் எவரும் எவ்வித விரிவுரைகளையும் நடாத்தியிருக்கவில்லை.

(ii) பாடநெறி ஆய்வு

--------------------------

(அ) மின்சாரம் மற்றும் இலத்திரனியல் பாடநெறிகளிலில், தேசிய பொறியியல் தொழிநுட்ப டிப்ளோமா (NDET) பாடநெறிக்காக விரிவுரைகள் நடாத்தப்பட்டமையை வருகைப் பதிவேடுகளில் உறுதிப்படுத்தப்படாத போதிலும் விரிவுரையாளர்களால் சம்பளத்திற்கு மேலதிகமாக விரிவுரை மணித்தியாலங்களுக்காக ரூபா 360,924 பெறப்பட்டிருந்தது.

(ஆ) சிவில், மின்சாரம், மற்றும் இலத்திரனியலில் தேசிய பொறியியல் தொழிநுட்ப டிப்ளோமா (NDET) பாடநெறிகளுக்கான காலஎல்லை இரு ஆண்டுகளான போதிலும் 2008 – 2010 வரையான காலப்பகுதிக்காக ரூபா 180,000 தொகையான ஒருங்கிணைப்புப் பணக் கொடுப்பனவு பெறப்பட்டிருந்தது.

(இ) பரீட்சைக்காக தோற்றுவதற்கு முன்னர் முழுமையான பாடநெறிக்கட்டணம் செலுத்தித்தீர்க்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் பாடநெறிக்கட்டணத்தை முழுமையாகச் செலுத்தியிராத மாணவர்களும் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

(ஈ) கணனி கல்வியில் தேசிய டிப்ளோமா

----------------------------------------------------------------

இப் பாடநெறிகளுக்கு உரித்தான 2010 ஆம் ஆண்டின் வரவுப் பதிவேட்டு ஆய்வின் போது அங்கீகரிக்கப்பட்ட மணித்தியாலங்களும் வரவுப் பதிவேட்டின் படியான மணித்தியாலங்களுக்கும் இடையே 5 முதல் 78 வரையிலான வீச்சிலான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(உ) கணனி மென்பொருள் தொடர்பான தேசிய பொறியியல் சான்றிதழ்

--------------------------------------------------------------------------------------------------------------------

2009 சனவரி 02 ஆம் திகதிய பத்திரிகை விளம்பரத்தின் படி இப் பாடநெறி 100 மணித்தியாலங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் இந் 100 மணித்தியாலங்களுக்காக வரவுப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(ஊ)(i) பொறியியல் தொழிநுட்ப மற்றும் மின்சாரம் மற்றும் சிவில் என்பவற்றில் தேசிய டிப்ளோமா (NDET) பாடநெறிகளுக்கான I ஆம் II ஆம் தவணைகளில் முதல்

தடவையாகத் தோற்றுவிக்கும் மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் திருப்தியற்ற நிலையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| **பாடநெறிகள்** | **சித்திபெற்றவர்கள்** | **சித்திபெறாதவர்கள்** | **வருகைதராதவர்கள்** |
|---|---|---|---|
| பொறியியல் தொழிநுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா - மின்சாரம், மற்றும் இலத்திரனியல் | | | |
| முதலாம் பகுதி | 04 | 17 | 02 |
| இரண்டாம் பகுதி | 0 | 19 | 04 |
| பொறியியல் தொழிநுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா – சிவில் | | | |
| முதலாம் பகுதி | 03 | 26 | 01 |
| இரண்டாம் பகுதி | 07 | 16 | 07 |

ii. தேசிய பொறியியல் தொழிநுட்பம் டிப்ளோமா (NDET) இயந்திரவியல் மற்றும் மின்சார மற்றும் இலத்திரனியல் போன்ற பாடநெறிகளில் குறித்த விரிவுரை மணித்தியாலங்கள் மற்றும் கணக்காய்விற்கு வழங்கப்பட்ட மாணவர்களின் வரவு அறிக்கையுடன் ஒப்பிடப்படுகையில் அங்கீகரிக்கப்பட்ட விரிவுரை மணித்தியாலங்கள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

iii. பொறியியல் தொழிநுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா – சிவில் பாடநெறிக்காக வருகைப் பதிவேடு சமர்ப்பிக்கப்பட்டிராமையால் அங்கீகரிக்கப்பட்ட விரிவுரை மணித்தியாலங்கள் உள்ளபடியாக நடாத்தப்பட்டதா என்பது குறித்து உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

iv. கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் படி நடாத்தப்பட்ட விரிவுரை மணித்தியாலங்கள் மற்றும் பரீட்சை பெறுபேறுகளை ஒப்பிடுகையில் போதியளவு

விரிவுரைகள் நடாத்தப்பட்டிராத விடயங்களின் விளைவுகள் திருப்தியற்றதாகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

| **விடயம்** | **குறித்த விரிவுரை மணித்தியாலங்கள்** | **நடாத்தப்பட்ட விரிவுரை மணித்தியாலங்கள்** | **தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை** | **சித்தியடையாத மாணவர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| பகுப்பாய்வு இலத்திரனியல் | 75 | 06 | 19 | 16 |
| தொலைத்தொடர்பாடல் | 75 | 31 3/4 | 19 | 15 |

### 2.2.2 பதவியணியினர்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் இரண்டு உதவிச் சிறாப்பர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்ட போதிலும் மூன்று பேர் அப் பதவிக்காக நியமிக்கப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 301,740 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### 2.2.3 பல்கலைக்கழக சபைக் கூட்டம்

வாழ்க்கைத் தொழில்சார் தொழிநுட்பவியல் பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 17 ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழக சபை 20 பேரைக் கொண்டிருந்ததுடன் கூட்டத்தில் கலந்துகொண்ட அங்கத்தவர்களின் எண்ணிக்கை 11 ஆன ஆகக் குறைந்த மட்டத்தில் நிலவியது. இதன் பிரகாரம், பல்கலைக்கழகத்தின் செயற்பாட்டை இயக்குதல், தீர்மானம் எடுத்தல் போன்ற முக்கிய செயற்பாடுகளை மேற்கொள்கையில் சகல அங்கத்தவர்களினதும் பங்களிப்பு ஆக்கபூர்வமான வகையில் கிடைக்கப்பெற்றிராமை அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 முகாமைத்துவத் திறமையீனங்கள்

2010 பெப்ரவரி 26 ஆம் திகதி இரத்மலானை மக்கள் வங்கிக் கிளையில் நடைமுறைக் கணக்கில் அக் கிளையில் உள்ள பல்கலைக்கழகத்தின் செயற்திட்ட நடவடிக்கைகள் பேணப்பட்டு வரும் நடைமுறைக் கணக்கிற்கு முறையான அங்கீகாரம் இன்றி ரூபா

906,000 தொகை மாற்றப்பட்டிருந்ததுடன் அத்தவறை சீராக்கப்படுவதற்கு பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்

தொழில்நுட்ப அபிவிருத்திச் செயற்திட்டத்திடமிருந்து 2010 நவம்பர் 26 ஆம் திகதி பெறப்பட்ட, ஒன்று ரூபா 1,199,900 பெறுமதியான 4 வர்ண அச்சீட்டு இயந்திரங்களும் ரூபா 660,800 பெறுமதியான Heat Press Bredermann BVP 2T இயந்திரம் ஒன்று 2011 மே 09 ஆம் திகதியில் உள்ளவாறும் பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் காணப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கைத்தொழில் தொழிநுட்ப பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக கவனம் கோரப்படுகின்றது.

(அ) விரிவுரைகள் நடாத்தப்படுதல்
(ஆ) பாடநெறிகள் நடாத்தல்
(இ) சொத்து முகாமைத்துவம்
(ஈ) முற்பணங்கள்